www.padippakam.com

ஆகஸ்ட் 2000

ரூ. 3.00

மக்கள்

மாண்பைக் காக்கும் மாத இதழ்

# களம்



## கடைசியில் சசிகலா படுகொலை!



## மேல்மருவத்தூர் அராஜகங்கள்

## ஐ.நா. சபையில் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# தலித் இரத்தம் குடிக்கும் காடுவெட்டிகள்

கடலூர் மாவட்டம் என்றால், தலித் மக்கள் படுகொலை செய்யப்படுவார்கள் என்பது உலகறிந்த செய்தியாகி விட்டது.

தலித் சமுதாயத்தை அழிப்பதற்காகவே உருவாக்கப்பட்ட வன்னியர் சங்கமும், பாட்டாளி மக்கள் கட்சியும் இன்றைக்கு தங்களின் தலைவர்களின் ஆணையை தட்டாமல் செய்து வருகின்றனர், கடலூர் மாவட்டம் பச்சாரப் பாளையத்தைச் சேர்ந்த சாதி இந்துக்கள்.

காடுவெட்டி குரு என்பவர் வன்னியர் சங்க தலைவராக வந்த பிறகு தான் பெருமளவு தலித் படுகொலைகள் மற்றும் தலித் பெண்கள் கற்பழிப்புகள் நடைபெறுகின்றன என்பது நடுநிலையாளர்களின் கருத்து.

காடுவெட்டி குருவின் ஒரே கொள்கை முழக்கம் ''தாழ்த்தப்பட்டவர்களின் தலையை வெட்ட சொல்வதுதான்'' இதன் எதிரொலியே. கடலூர் மாவட்டம் வடலூர் அருகேயுள்ள குறிஞ்சிப்பாடி பேரூராட்சியில் அடங்கிய விழப்பள்ளம் பகுதியில் தலித் மக்கள் மீது வன்னியர்கள் நடத்திவரும் தொடர் தாக்குதலும், தலித் பெண் படுகொலையும் வீடு புகுந்து சூரையாடுதலும் நடைபெற்று வருகின்றது. இதற்கெல்லாம், தலைமையேற்று வழி நடுத்துவது யார்? முழுக்க, முழுக்க வன்னியர்கள் தான்! இதில் மட்டும் இவர்களுக்கு கட்சி பாகுபாடு என்பது கிடையாது.



நிர்மலாவின் அண்ணன் அண்ணி

தலித்பகுதியான விழப்பள்ளம் நான்கு புறங்களிலும் சாதி இந்துக்களான முதலியார்களால் சூழப்பட்டது. ஆனால் முதலியார்கள் இப்பகுதியில் சூழ்ந்திருந்தாலும், எந்த பிறச்சனையிலும் இவர்கள் தலித் மக்களோடு நேரடியாக மோதியது கிடையாது. தலித் மக்கள் வசிக்கும் பகுதியிலிருந்து சுமார் நான்கு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பாச்சரா பாளையத்தைச் சேர்ந்த வன்னியர்கள் தான் தலித் மக்கள் மீது அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றார்கள்.

சமீப காலமாக அப்பகுதியில் நடைபெற்று கொண்டிருக்கின்ற தலித் மக்கள் மீதான தாக்குதலுக்க காரணம் அறிய நேரில் ஆஜரானோம்.

தலித் மக்களின் ஒவ்வொருவரின் முகத்திலும் அச்சம் குடிகொண்டிருந்ததை நம்மால் உணர முடிந்தது. இதிலிருந்து வன்னியர்களின் ஆதிக்க வெறியாட்டம் எந்தளவில் கொடி கட்டி பறக்கிறது என்பதையும் உணர வைத்தது.

வன்னியர்களால் அடித்து நொறுக்கப்பட்டு, சூறையாடப்பட்ட தலித் வீடுகளை பார்த்தோம். அதை படமாக்கினோம். பின்னர் அப்பகுதி கவுன்சிலரான வீர பெருமாளை சந்தித்தோம். அவரது வீடும் வன்னியர்களின் தாக்குதல்களிலிருந்து தப்பவில்லை. உறவினர் திருமணத்திற்காக பீரோவில் வைத்திருந்த 80 ஆயிரம் ரொக்கமும், 20 பவுன் நகையும் சூறையாடப்பட்டிருந்தன.

மேலும் அவர் ''சார், 17.6.2000 அன்னைக்கு விழப்பள்ளத்தைச் சேர்ந்த பழுக்காரன் என்கின்ற விஜய் குறிஞ்சபாடி ராஜவீதியில் உள்ள ஆறுமுகம் என்பவருடைய சலூன் கடையில் சேவிங் செய்துகொண்டு 5 ரூபா கொடுத்தாரு. அதே கடையில பாச்சரா பாளையத்தை சார்ந்த வன்னியர் ஒருவர் சேவிங் செய்ததற்கு 4 ரூபாய் கொடுத்தார். இதனால கடைகாரரு அவரு 5 ரூபா கொடுத்துட்டு போறாரு நீங்க 4 ரூபா கொடுக்கிறீங்களேனு சொன்னார்.

இதனால் ஆத்திரமடைந்த இந்த வன்னியர் கடைக்காரரை கண்டு கொள்ளாமல் இவருக்கு முன்னர் சேவிங் செய்து 5 ரூபாய் கொடுத்துவிட்டு வெளியில் அமர்ந்திருந்த விஜயை ''ஏண்டா பற நாயே நானே 4 ரூபா கொடுக்கிற, நீ ஏன்டா 5 ரூபா கொடுக்கிறேனு பயங்கரமா அடிச்சு உதைச்சாருங்க.

தொடர்ச்சி 19ம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com


**இனியொரு யுகம் செய்வோம்!**

திட்டம்: 101
செயல்: 2

நிறுவன-ஆசிரியர்

**எல். யேசுமரியான்**

ஆசிரியர் குழு

**சிந்தை ராஜன்**
**விடுதலை நெஞ்சன்**
**பட்டி தமிழ்விரும்பி**

உரிமை மற்றும்
வெளியிடுபவர்

**ஜி. கோபிநாதன்**

67, கெனால் தெரு,
சி.பி. ரோடு,
சென்னை 600 021.

அச்சிட்டோர்

**நவஜோதி அச்சகம்**

சென்னை-600 002

படைப்புகள், சந்தா
மற்றும் தொடர்புகளுக்கு :

**எம்.ஜெ. நாயகம்**

நிர்வாகி
21டி/1, திருக்கழுகுன்றம் ரோடு,
செங்கல்பட்டு-603 002.


# களம் காணும் நெஞ்சங்களே!



இராமநாதபுரத்தில் சாதிக்கலவரம், போடியில் சாதிக் கலவரம், தேனியில் சாதிக்கலவரம், தென் மாவட்டங்களில் சாதிக்கலவரம், தஞ்சையில் சாதிக்கலவரம், விழுப்புரத்தில் சாதிக்கலவரம், பொன்னூரில் சாதிக்கலவரம், கடலூரில் சாதிக்கலவரம் என்ற செய்திகள் வந்து கொண்டேயிருக்கின்றன.

இவைகள் எல்லாம் உண்மையில் சாதிக்கலவரங்களா? இரண்டு சாதிகள் மோதிக்கொண்டு அங்கு கலவரங்கள் உருவாவதைத்தான் சாதிக்கலவரங்கள் என்று கூற வேண்டும். தாழ்த்தப்பட்ட தலித் மக்கள் சாதியற்றவர்கள் (**Outcastes**). இவர்களுக்கென்று சாதியல்ல. எனவே சாதிக்கலவரம் என்றாலே இரண்டு சாதிகள் ஈடுபட்டிருக்க வேண்டும்.

பொதுவாக தலித்தும் மற்றொரு சாதியும் மோதிக்கொள்வதையே சாதிக்கலவரம் என்று கூறுகின்றனர். என்னதான் வேறுபாடும், சாதிக்கட்டுப்பாடும் இருந்தாலும் இரண்டு சாதிகள் மோதிக்கொண்டால் அங்கு கலவரங்கள் வெடிப்பதில்லை. உயிர் இழப்புகள் நிகழ்வதில்லை. இதற்கு எல்லா அரசு அமைப்புகளும் உதவியாகவும் தயாராகவும் உள்ளன. ஆனால் தலித் ஈடுபடும் போது மட்டும் உயிரிழப்பும், உடமைகள் இழப்பும் எளிதில் நடைபெறுகின்றன.

தலித் மக்கள் எங்கெல்லாம் எப்பொழுதெல்லாம் தீண்டாமையை எதிர்க்கின்றார்களோ, தங்கள் உரிமைகளை நிலைநாட்ட முயலுகின்றார்களோ அங்கெல்லாம் அதையெல்லாம் "கலவரங்கள்" என்றும், தலித் மக்கள் மீது நடத்தும் தாக்குதல்களை தடுக்கும் முயற்சிகளை கூட "கலவரங்கள்" என்றும் சித்தரித்துக் காட்டுகின்றனர். இவைகள் கலவரங்கள் அல்ல. மாறாக தலித் மக்கள் மீது நடத்தப்படும் "தாக்குதல்கள்" அல்லது "வன்முறைகள்" என்றுதான் அழைக்க வேண்டும்.

தலித் மக்களுக்கு உரிமைகள் மறுக்கப்படுவதை, தொடர்ந்து மறுக்கப்படுவதை "சரி" என்றால் அதை "சட்டம்" என்றும் தீண்டாமை கொடுமைகளை எதிர்க்காமல் "மௌனம்" காத்தால் அதை "ஒழுங்கு" என்றும் கூறப்படுகின்றது. இது சாதிய "சட்டம் – ஒழுங்கு"

எனவே களத்தில் உள்ளவர்கள் சாதி வெறியர்கள் பேசும் சட்டம்-ஒழுங்கை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். நம்மைப் பொருத்தமட்டில் தீண்டாமையை ஒழிப்பதுதான் சட்டம் (அரசியல் சட்டம் பிரிவு 17) நம்மையும் மனிதர்களாக ஏற்றுக்கொள்ள செய்வதுதான் ஒழுங்கு (அரசியல் சட்டம் முகவுரை) இத்தகைய சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட களத்தில் நின்று போராடு!

*என்றும் களம் நிற்கும்.*

*எல். யேசுமரியான்*



படிப்பகம்

www.padippakam.com



# அம்பேத்கருக்கு அவங்கேகால மணிமண்டபம்

- பதவி

சமீபத்தில் பெயரளவில் மணிமண்டபத்தை திறந்து வைத்து தலித் மக்களை ஏமாற்றத் திற்குள்ளாக்கியுள்ளது கருணாநிதி அரசு.

வருகின்ற சட்டமன்ற தேர்தலைக் கருத்தில் கொண்டு, தலித் ஓட்டுக்காக அவசரக் கோலத்தில் அள்ளித் தெளிக்கப்பட்ட விழாவே அம்பேத்கர் மணிமண்டப திறப்பு விழா.

ஜெயலலிதா ஆட்சியில் தலித் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும், படுகொலை களையும் மூடி மறைப்பதற்கு பல ஆண்டு கோரிக்கையான “அம்பேத்கர் மணிமண்டப கோரிக்கையை” நிறைவேற்றும் தந்திரத்தை கையில் எடுத்தது அப்போதைய அ.தி.மு.க அரசு.

அம்பேத்கருக்கு மணி மண்டபம் கட்டப் போவதாக ஜெயலலிதா அறிவித்து, இடத்தை தேர்வு செய்யவே பல ஆண்டுகள் ஓடின! நெருங்கி வந்த சட்ட மன்ற தேர்தலையொட்டி சென்னையில் ஐயப்பன் கோயில் எதிரில் சாக்கடை ஓரமாக 5 ஏக்கர் நிலத்தை ஒதுக்கி அதில், அம்பேத்கருக்கு மணி மண்டபம் கட்ட போகிறேன் என்ற அறிக்கையை கொடுத்ததோடு அந்த மணிமண்டபம் கேள்விக்குறியாகியது.

அப்போது எதிர்கட்சியாக இருந்த கருணாநிதி தலித் மக்களின் பாதுகாவலன் நான்தான் என காட்டிக்கொள்ளும் வகையில் “அ.தி.மு.க குறித்த காலத்தில் அம்பேத்கர் மணிமண்டபத்தை கட்டிக் கொடுக்காவிட்டால் தி.மு.க தன் சொந்த செலவிலேயே கட்டிக் கொடுக்கும்” என்று அறைகூவல் விட்டார்.

பின்னர் ஆட்சிக்கு வந்த கருணாநிதி ஜெயலலிதா தொடங்கிய இந்த மணிமண்டபத்தை கட்ட போவதாக அறிவித்த 4 ஆண்டுகள் இதைப்பற்றி கண்டுக்கொள்ளாமல் இருந்துவிட்டு தற்போது தமிழகமெங்கும் தலித்துகள் படு கொலைகள் செய்யப்படுவதாலும், கொடுமை களுக்கு ஆளாவதாலும், வெறுத்துப்போன தமிழகத்து தலித் மக்கள் தேர்தலில் தன்னை ஓரம் கட்டி விடுவார்கள் என்ற பயத்தால் அதிரடியாக இந்த மணி மண்டபத்தை கட்ட தொடங்கினார்.

தமிழக வரலாற்றிலேயே தி.மு.க ஆட்சி காலத்தில் ஒரு திட்டத்தை கொண்டுவந்தால் அதை அ.தி.மு.க ஆட்சி காலத்தில் நிராகரித்து விடுவார்கள் இதில் கருணாநிதிக்கும், எம்.ஜி.ஆர் -க்கும் எப்போதுமே எதிர்ப்பான கருத்துக்கள்தான் இருந்து வந்துள்ளன. உதாரணமாக வீராணம் திட்டத்தை கருணாநிதி கொண்டுவந்து 75 சதவீத வேலைகள் முடிந்த பின்னரும் கூட எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்ததும் அதை நிராகரித்துவிட்டார். இதனால் அரசுக்கு பல கோடி ரூபாய் இழப்பு

ஆனால் அம்பேத்கர் மணி மண்டபத்தில் மட்டும் இந்த இரு கட்சிகளுமே ஒரே கருத்தைக் கொண்டது.

சாதிய ரீதியாக தலித்துக்களை பழி வாங்குவதில் மட்டும் இவர்கள் ஒரே கொள்கை யாக உள்ளனர். எனவேதான் அம்பேத்கருக்கு சாக்கடை ஓரம் மணிமண்டபம் கட்ட ஜெயலலிதா கொண்டு வந்த அந்த பணியை அப்படியே கருணாநிதி மாற்றாமல் தலித் மக்கள் ஒதுக்குபுறமாகத்தான் இருக்க வேண்டியவர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

அவர்கள் சாக்கடை ஓரம்தான் தள்ளப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லாமல் அ.தி.மு.க. கொண்டுவந்த அந்த திட்டத்தை தி.மு.க தலைவர் நிறைவேற்றியுள்ளார். சாதி என்ற அடிப்படையில் மட்டும் இவர்கள் ஒன்றுபட்ட கருத்தாக இருப்பதை காணமுடிகிறது

கருணாநிதி ஆட்சிக் காலத்தில்தான் மறைந்த தலைவர்களின் புகழ் பரப்பும் வகையில் மணிமண்டபங்கள் அமைத்து அவர்களுக்கு பெருமை சேர்த்து வருகிறது என மார்தட்டி வருகின்றனர். ஆனால் எவ்வளவு பெரிய தலைவராக இருந்தாலும் அவர்களுக்கு சாதிவாரியாகத்தான் இடம் ஒதுக்கி மணிமண்டபம் கட்டுவோம் என்ற வகையில், இடம் ஒதுக்கி இருப்பது பின்னர்தான் வெட்ட வெளிச்சமானது.

தலைவர்களின் நினைவு மண்டபங்களை முக்கிய இடங்களான சென்னை மெரினா கடற்கரை, கிண்டி ராஜ்பவன் அருகில்தான் அமைத்து வருகிறது தமிழக அரசு.

எனவே தேசிய தலைவரும் இந்திய அரசியல் சட்டத்தை செதுக்கி கொடுத்த அரசியல் சாசன சிற்பியுமான அண்ணல் அம்பேத்கருக்கு இந்த இரு இடங்களில்தான் இடம் ஒதுக்கி மணி மண்டபம் கட்டுவார்கள் என தலித் சமுதாயமே எதிர்பார்த்திருந்தது. ஆனால் சாதியே இல்லாத சமுதாயத்தை உருவாக்குவேன் என பறை சாற்றிவரும் தமிழக முதல்வர் கடற்கரையை திராவிட கட்சி தலைவர்களுக்கும், கிண்டியில்



திறப்புவிழா முடிந்தும் தொடரும் கட்டுமானப்பணிகள்

காங்கிரஸ் சாதி இந்துக்களுக்கும் என ஒதுக்கி அதில் மண்டபங்கள், பூங்காக்கள் அமைத்து சாதி பிரித்து அழகு பார்க்க தொடங்கிவிட்டார்.

மேலும் கடற்கரையில் 25 ஆண்டுகளுக்கு முன்பு பல கோடி செலவில் ஏக்கர் கணக்கில் நிலத்தை மடக்கி நினைவு மண்டபம் என்ற பெயரில் ஆடம்பர பூங்காக்கள், அணையா விளக்குகள் அமைத்திருக்கிறார்கள். அதை மீண்டும் பல மடங்கு செலவு செய்து அலங்கார வளைவுகள், அழகிய வேலைபாடுகளுடன் கூடிய சிற்பங்கள், வகைவகையான பூங்காக்கள், வண்ணமயமான நீர் ஊற்றுகள், இரவை பகலாக்கும் அலங்கார விளக்குகள் போன்ற நட்சத்திர அந்தஸ்தில் அரசு பணத்தை செலவு செய்து கட்சிகளின் பலத்தை கூட்டுகிறது.

இந்திய தலைவர்களில் முக்கியமானவரும், உலக மக்களால் போற்றப்பட்டவரும், சட்ட மாமேதையுமான அண்ணல் அம்பேத்கருக்கு மணிமண்டபம் இத்தகைய இடங்களில் அமைக்காமல் சென்னைக்கு வரும் மக்களுக்கு தெரியாத இடமான ஒரு ஒதுக்குபுரத்திலே, சாக்கடையோரம் இடம் ஒதுக்கி, அதில் மணிமண்டபம் கட்டி அம்பேத்கரை சிறுமைப் படுத்தியுள்ளது தமிழக அரசு.

மாமேதையின் மணிமண்டபத்தை மக்கள் பார்வை படுகின்ற இடத்தில் அமைத்துவிட்டால் அவரது கொள்கைகளை மக்கள் புரிந்து கொண்டு சாதி விடுதலைக்கு புறப்பட்டு விடுவார்கள் என்ற பல தரப்பட்ட மக்கள் அவரது சித்தாந்தத்திற்கு ஆட்பட்டு எழுச்சி பெற்று விடுவார்களோ என்ற பயமா? காந்தி மண்டபம் உள்ள கிண்டி பகுதியில் மணிமண்டபமும் சிலையும் வைத்துவிட்டால் காந்தியும் காங்கிரசும் தீண்டாமைக்கு எதிராக என்ன செய்தார்கள் என்ற கேள்வி எழுப்புவார்கள் என அச்சமா? இறந்து சமாதியாக உள்ள காந்தி, ராஜாஜி, பக்தவச்சலம், போன்ற சாதி இந்துக்கள் தீட்டுப்பட்டு விடுவார்கள் என்ற சாதிகட்டுப்பாடா? அல்லது தாழ்த்தப் பட்ட சமுதாயத்தில் பிறந்த ஒரு தலைவருக்கு, உயர் சாதி தலைவர்

(தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)



படிப்பகம்

www.padippakam.com

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி-இன்று தமிழகத்தில் தெரியாத கிராமங்கள் இல்லை. குறுகிய காலத்தில் பல அடுக்குமாடிகள், சொகுசு பங்களாக்கள், அரண்மனைகள், பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி என இன்று முன்னேறிய காட்சி. "அம்மா" "சக்தி" என கடவுளின் பெயரால் மூலதனம்! ஏழை மக்கள் இங்கு வாடிக்கையாளர்கள். குறிப்பாக பெரும்பாலான தலித் மக்கள் அம்மாவின் அருள் வேண்டி? மேல்மருவத்தூரில் குவிகின்றனர்.

# மேல்மருவத்தூர் அராஜகங்கள்

அம்மாவின் உண்டியலை நிரப்புகின்றனர்.

ஆனால் மேல்மருவத்தூரில் வசிக்கும் தலித்களுக்கு மட்டும் அம்மாவின் அருள் கிடையாது. அங்குள்ள தலித்துக்களை ஒழித்து கட்டியாக வேண்டும் என்ற வெறியினால் அநேக நேரங்களில் ருத்ர தாண்டவம் ஆடுகிறார்கள் அம்மாவின் அடியாட்கள்.


பங்காரு அடிகளார்

11-07-2000 அன்று தலித் மக்கள் கொண்டாடிய மாரியம்மன் கோவில் திருவிழாவால் கொதித்துப் போனார் ஆதிபராசக்தி "பறநாய்களுக்கெல்லாம் என்னடா சாமி வேண்டியிருக்கு" என கூறி தன்னுடைய சிஷ்யக்கோடிகளான செவ்வாடை சிங்கங்களை தலித் மக்கள் மீது கொலை வெறி தாக்குதல் நடத்த ஏவி விட்டு மகிழ்ந்தார் அம்மா.

தலித் மக்களுக்கு அம்மா அருளிய அந்த சிறப்பு அருளாசியை அறிய நாமும் களத்தில் இறங்கினோம். குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் சாதாரண இளநிலை ஆசிரியராக பணியாற்றி வந்தவர் பங்காரு. குறுகிய காலத்தில் நிறைய சம்பாதிக்கவேண்டும் என்ற ஆசையில் ஆசிரியர் வேலையை உதறிவிட்டு சாமி வேஷம் போட்டார். நாள்தோறும் சாமிக்காக தெருத்தெருவாக அலையும் கூட்டம் இவரிடம் கூடியது. இவரே "ஆதிபராசக்தி அம்மா"வாக மாறினார்.

பக்தர்களின் பணமும் கரைபுரண்டோடியது. இதிலும் திருப்தியடையாத இந்த பங்காரு முன்னாள் அமைச்சர் நெடுஞ்செழியன் மனைவியுடன் கூட்டு சேர்ந்து கள்ள நோட்டு அடித்தார் என்பது வேறு செய்தி.

மலையென குவிந்துபோன ரூபாய் நோட்டுக்களுக்கு பாதுகாப்பு வேண்டி ஆதிபராசக்தி அறக்கட்டளையை ஆரம்பித்தார். அதனால் இவருக்கு டெல்லி முதல் சென்னை வரை பலவித அரசியல் தலைவர்கள், அதிகாரிகளின் ஆதரவு கிடைக்க ஆரம்பித்தது.

இதனை பயன்படுத்திக்கொண்ட பங்காரு மேல்மருவத்தூரிலிருந்து புறம்போக்கு நிலங்கள், பஞ்சமி நிலங்கள், ஏரி ஆகிய அனைத்தையும் வளைத்துப் பிடித்தார். அதன்பிறகும் ஆசை அடங்காத இவருக்கு, பூர்வகுடிகளான தலித் மக்கள் விவசாயம் செய்து பிழைத்து வந்த நிலங்கள் மீது ஒரு கண் பதிந்தது. தன்னுடைய அரசியல் பலத்தாலும், பண பலத்தாலும், ரவுடிகள் ராஜ்ஜியத்தாலும் தலித் மக்களின் நிலங்களை கட்டாயப்படுத்தி அபகரித்தார்.



படிப்பகம்

www.padippakam.com

நிலங்களை கொடுக்க மறுத்த பலரை அச்சுறுத்தினார். கொலை செய்தும் பிடுங்கினார். அப்படியே தலித் மக்கள் தங்களுடைய நிலங்களை விற்க நேர்ந்தாலும் பங்காரு சொல்கின்ற அடிமாட்டு விலைக்குத் தான் விற்றாக வேண்டும். கணிசமான விலைக்கு பங்காரு தவிர மற்ற எவருக்கும் விற்க நேர்ந்தால் கொடுப்பவர்களின் நிலையும் அதை வாங்குபவர்களின் நிலையும் அதோகதிதான். இப்படியாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வளைத்துப்போட்டு அம்மா வேஷத்தில் அதிபதியானார். இன்று அவரது சொத்து பல ஆயிரம் கோடி.

நாளடைவில் தலித் மக்கள் குடியிருப்புகளை சுற்றி சுற்றுச்சுவர் அமைத்து தனி தீவாக்கி விட்டார் பங்காரு. இன்று மேல்மருவத்தூர் கோவில் அருகே தலித் மக்கள் வசிப்பது "சாமிக்கு தீட்டு" என்று கூறி தலித் மக்களை ஊரைவிட்டே காலி செய்ய சொல்லி "காளியாக" மாறியுள்ளார் பங்காரு.

தலித் மக்கள் குடியிருக்கும் பகுதியை காலி செய்துவிட்டு அந்த இடத்தில் பேருந்து நிலையம் அமைக்கப்போவதாக திட்டம் தீட்டியுள்ளார். இதனால் இம்மக்கள் மீது தொடர்ந்து திட்டமிட்டே தாக்குதல்களையும், அச்சுறுத்தல்களையும் கட்டவிழ்த்துள்ளார். இதன் உச்சகட்டமாக நடந்ததுதான் 11-07-2000 அன்று தலித் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட கொலை வெறிதாக்குதல். இதற்கென்றே குறைந்தது ஆயிரம் செவ்வாடை தொண்டர்கள் என்ற பெயரில் குண்டர்களை தன்னுடன் வைத்துள்ளார்.

"இங்குள்ள நாங்க ஒவ்வொரு குடும்பமும் பங்காருவால் பலவிதங்களில் பழிவாங்கப் பட்டவங்க, அவரைப் பத்தி நாங்க வாய திறந்தால் எங்களுடைய உயிருக்கு நிச்சயமாக உத்திரவாதம் கிடையாது. இது போல பல பேரை சாவடிச்சுப் போட்டிருக்காங்க. நாங்க அதைப்பத்தி வெளியில சொல்ல முடியாது. சொன்னால் எங்களுக்கு அதே நிலைமைதான்" என மேல்மருவத்தூர் தலித் மக்கள் நம்மிடம் உண்மைச் செய்தியை சொல்ல பயந்தனர். இறுதியாக ஒரு சிலர் "சார் தயவு செய்து எங்க பெயரை போட்டுடாதீங்க தெரிஞ்சா எங்களை கொன்னுடுவாங்க" சொல்லி நம்மிடம் சத்தியம் வாங்கிய பிறகே நடந்தவற்றைக் கூறினர்.

"வழக்கமாக வருடாவருடம் நாங்கள் மாரியம்மன் கோவில் திருவிழாவை கொண்டாடுவோம். அது போலவே கடந்த 11-07-2000 அன்று மாரியம்மன் கோவில் திருவிழாவை கொண்டாடினோம். அன்றைய தினம் இரவு மாரியம்மன் தேரை இழுத்துக்கொண்டு பழைய ஜி.எஸ்.டி. ரோடு வழியாக ஆதிபராசக்தி கோவில் அருகே உள்ள மேட்டுக்காலனிக்குச் சென்றோம். இந்த பழைய ஜி.எஸ்.டி. ரோடு அனைவருக்கும் பொதுவான ரோடு. இந்த ரோட்டின் குறுக்கில் ஆதிபராசக்தி கோயிலைச் சேர்ந்தவங்க நிரந்தரமான பந்தல் போட்டுள்ளனர். நாங்கள் தேரை இழுத்துக்கொண்டு அந்த வழியே சென்று மேட்டுக் காலனியைச் சுற்றிவிட்டு மீண்டும் அதே வழியில் திரும்பிக்கொண்டிருந்தோம்.

திடீரென அங்குள்ள செவ்வாடை தொண்டர்கள் கட்டை, கத்தியென பயங்கர ஆயுதங்களுடன் வந்து பற நாய்களுக்கெல்லாம், என்னடா சாமி வேண்டியிருக்கு, பற சாமிகளுக்கெல்லாம் இங்கு என்னடா வேலைன்னு சொல்லியபடி எங்க எல்லோரையும் அடிச்சி உதைச்சாங்க இதல சுமார் இருபது பேருக்கு மேல பலத்த அடிங்க. சங்கர், பிரபு என்ற இளைஞருங்க அவங்க பிடியில நல்ல மாட்டிக்கினாங்க. அவர்களை அவங்க இடத்துக்கு இழுத்துக் கொண்டு போய் அடித்து உதைத்து குற்றுயிரும் குலைஉயிருமாக வெளியே போட்டுவிட்டனர். செவ்வாடை தொண்டர்கள் தாக்கியதால் இழுத்து வந்த தேரை அங்கேயே போட்டுவிட்டு உயிருக்கு பயந்து ஓடிவிட்டோம்.


தலித் மக்களின் குடியிருப்புகளை சுற்றி சுற்றுச்சுவர்



படிப்பகம்


www.padippakam.com

நாங்க அங்கிருந்து ஓடியபின் செவ்வாடைத் தொண்டர்கள் தேரை இழுத்துக்கொண்டு போய் தேசிய நெடுஞ்சாலையில் போட்டுவிட்டனர். இதனால் அந்த வழியாக வந்த பஸ், லாரி போன்ற வாகனங்கள் சுமார் மூன்று மணி நேரம் நின்றுவிட்டன. அதன்பிறகு ஆயுதப்படை போலீஸ் எங்கள் காலனிக்குள் புகுந்து கண்ணில் பட்டவங்களையெல்லாம் அடிக்க ஆரம்பிச்சாங்க" இதுல எங்க பொம்பளைங்களுக்கு நிறைய அடி, பொம்பளைங்க கட்டியிருந்த துணியெல்லாம் அவிழ்த்து ரொம்ப அவமானபடுத்தினாங்க. எல்லா வீட்டுலேயும் புகுந்து அடித்து நொறுக்க ஆரம்பிச்சாங்க என பயந்துப் போய் நம்மிடம் நடந்தவற்றைக் கூறினர்.

பங்காருவின் மனைவி லட்சமி பங்காருதான் மேல்மருவத்தூர் பஞ்சாயத்துத் தலைவர், அவர் வைத்ததுதான் இங்குள்ள சட்டம்-பஞ்சயாத்துக்கு சொந்தமான ஏரி, பனைமரம், புளியமரம் ஏலம் ஆகிய எந்த பலனையும் தலித் மக்கள் அனுபவிக்க முடியாது. இது அங்குள்ள எழுதப்படாத சட்டம். பஞ்சாயத்து பொது இடத்தில் கட்டப்பட்டுள்ள முப்பதுக்கும் மேற்பட்ட கடைகளை அனுபவிக்கும் உரிமை இங்குள்ள தலித் மக்களுக்கு கிடையாது. வெளி ஊர்களிலிருந்து இங்கு குடியேறியவர்களுக்கு அதிலும் சாதி இந்துக்களுக்கு மட்டுமே கடைகள் ஒதுக்கப்படும்.

அதேபோல் குடும்ப அட்டை இங்குள்ள தலித் மக்களுக்கு பெரும்பான்மையோருக்கு இன்னும் கிடைத்தபாடில்லை. ஆனால் வெளி ஊரிலிருந்து இங்கு பிழைக்க வந்தவர்களுக்கு உடனடியாக குடும்ப அட்டை ஏற்பாடு செய்யப்பட்டுவிடும்.

தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு இக்கிராமத்திற்கு அனுமதி கொடுத்தும் ஆதிபராசக்தி கோயில் நிர்வாகம் தாங்கள் கட்டித்தருவதாக கூறி இதுவரையிலும் கட்டித்



பஞ்சாயத்து கடைகளில் தலித்துகளுக்கு இடமில்லை

தராமல் காலம் கடத்தி வருகின்றனர். மக்கள் பயன்படுத்துகிற சுடுகாட்டையும் வளைத்துப் போட்டு அதற்கும் சுற்று சுவர் அமைத்துவிட்டார் பங்காரு.

எப்படியாவது இங்குள்ள தலித் மக்களை ஊரைவிட்டு காலி செய்துவைத்துவிட வேண்டும் என்ற வெறியோடு செயல்பட்டு வருகின்றார் பங்காரு. அதற்காக எந்த விலையும் கொடுக்க தயாராக இருக்கின்றார். அரசியல்வாதிகளின் பேராதரவு தொடர்ந்து வருவதால் அராஜகம் எல்லை மீறுகிறது.

ஓட்டு போட்ட தலித் மக்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. மேல்மருவத்தூர் தலித் மக்கள் உரிமை போராட்டத்தை கையிலெடுப்பதற்கு முன் அரசிடம் உயிர் பிச்சைக் கேட்கின்றனர். ஆனால் தமிழக அமைச்சர்களும், அதிகாரிகளும் பங்காரு அம்மாவிடம் ஆசிபெற நேரம் ஒதுக்கி காத்திருக்கின்றனர்.

தலித் மக்களுக்கு எதிரான கொடுமைகளை கேள்விப்பட்ட உடனேயே ஆஜரானார்கள் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க நிர்வாகிகள். தொடர்ந்து போராட்டத்திற்கு தயாராகி வருகின்றனர்.

தமிழகமும், மேல்மருவத்தூர் தலித் மக்களுக்காக பெரும் போராட்டத்திற்கு தயாராகி வருகிறது.

- சிந்தை. ஆர்.

**அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தின் சார்பாக நடத்தப்படும் கேளம்பாக்கம் இரவு பள்ளியில் அதனுடைய ஒருங்கிணைப்பாளர் மூர்த்தி அம்பேத்கர் அவர்களின் திருவுருவ படத்தை திறந்து வைக்கும் காட்சி**





படிப்பகம்

www.padippakam.com

# காலனிக்கு பஸ் போவாதுய்யா...



யோவ், எந்த ஊர்லயா காலனிக்கு பஸ் போவுது. பெர்சா பஸ் வேணும்னு கேக்க வந்திட்டீங்க-

காலகாலமாக தங்கள் பகுதிக்கு பேருந்து வசதி கேட்டு போராடி வரும் வந்தவாசி வட்டம் காரம், கொசப்பட்டு தலித் மக்களிடம் காரம் பஞ்சாயத்து தலைவர் ரமேஷ் கூறியது இது!

திருவண்ணாமலை மாவட்டத்திற்குட்பட்ட இக்கிராமங்களில் பெரும்பான்மையாக வசித்து வருபவர்கள் தலித் மக்களே ஒவ்வாத அவசர நிலையாக இருந்தாலும் இம்மக்கள் சுமார் பத்து கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வந்தவாசி நகருக்கு நடந்தோ அல்லது மிதிவண்டியிலோ தான் சென்றாகவேண்டிய நிலை இருந்து வந்தது.

இறுதியாக தமிழக அரசின் ஆணைப்படி வந்தவாசியிலிருந்து இக்கிராமங்கள் வழியாக ஒழப்பாக்கம் என்ற கிராமத்திற்கு தனியார் மினி பேருந்து ஒன்று இயக்கப்படுகின்றது. தலித் மக்கள் வசிக்கும் பகுதி வழியே சாலை வசதி இருந்தும் இப்பேருந்து சாதி இந்துக்கள் வசிக்கும் பகுதி வழியே சென்று விடுகின்றது.

இதனால் இங்குள்ள தலித் மக்கள் குறைந்தது இரண்டு கிலோ மீட்டர் தூரம் நடந்து வந்துதான் பேருந்தில் ஏறவேண்டிய நிலை, இப்பேருந்தில் பெரும்பாலும் தலித் மக்களே பயணம் செய்கின்றனர்.

இது சம்மந்தமாக காரம், கொசப்பட்டு தலித் மக்கள் பல நேரங்களில் அதிகாரிகளுக்கு மனு கொடுத்தும் அதிகாரிகள் இவர்களைக் கண்டு கொள்வதாக இல்லை. இதனால் இக்கிராம தலித் மக்களுக்கு ஆதரவாக அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம் போராட்டத்திற்கு தயாரானது இதனை அறிந்த வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதில் மக்களுடைய கோரிக்கைகளை கட்டாயம் நிறைவேற்றி வைப்பதாக உறுதி அளித்தனர்.

ஆனால் அவர்கள் கொடுத்த வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டு, இன்னும் கண்டுகொள்ளாமல் மெத்தனப் போக்கை கடைபிடித்து வருகின்றனர்.

இதனால் கொதிப்படைந்து போயுள்ள தலித் மக்களும், அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு மக்கள் வசிக்கும் பகுதிக்கு உடனடியாக பேருந்து வசதி செய்து தரப்பட வில்லையென்றால் வந்தவாசி சுற்றியுள்ள எந்த பகுதிக்கும் பேருந்து செல்லாது என எச்சரித்துள்ளனர்.

- நமது நிருபர்



படிப்பகம்

www.padippakam.com

# ஐ.நா. சபையில்
# அகில உலக
# டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம்.



மே முதல் வாரம் ஜெனிவாவில் உள்ள ஐ.நா. சபையில் மனித உரிமை ஆணையம் நடத்திய அமர்வுகளில் பல்வேறு தலித் அமைப்புகள், மனித உரிமை அமைப்புகள் ஆகியவற்றின் சார்பாக அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க நிறுவனர் வழக்குரைஞர் எல். யேசுமரியான் அவர்கள் சமர்ப்பித்த அறிக்கை.

தெற்காசியாவில் இனமானது சாதியோடும் பரம்பரையாக ஒதுக்கப்பட்ட மக்களோடும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருக்கிறது. முறையான பாதுகாப்பு சட்டத்தில் இருந்தபோதிலும், சாதி வேற்றுமை தொற்று நோயாக பரவிக்கிடக்கிறது. மேலும் சமுதாய நெறிமுறைகளும் அரசு அமைப்புகளான காவல்துறை, நீதிமன்றங்கள், அரசு அதிகாரிகள் வழியாக சாதிய வேற்றுமைகள் மீண்டும் மீண்டும் திணிக்கப்படுகின்றன.

இந்தியாவில் மட்டும் 160 மில்லியன்கள் தீண்டத்தகாதவர்கள் அல்லது தலித்துகள் (ஷெட்யூல்டு வகுப்பினர்) என்று அழைக்கப்படுகின்ற மக்கள் இருக்கின்றார்கள். தொடர்ச்சியாக இவர்கள் காவல் துறையினராலும், உயர்சாதியினராலும் நிலமற்றவர்களாக்கப்படுகிறார்கள். அவலமான தொழிலைச் செய்ய கட்டாயப்படுத்தப் படுகிறார்கள், கேவலமாக நடத்தப்படுகிறார்கள், அதைவிட கொடூரமாக கொலை செய்யப்படுகிறார்கள். இது இந்தியாவின் மறைமுக அரசியல் அமைப்பாகும்! இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள கிராமங்கள் எல்லாம் ஒட்டு மொத்தமாக சாதியால் பிரிக்கப்படுகின்றன.

1950 இந்திய அரசியல் சட்டத்தின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்று சொன்னாலும் கூட நடைமுறையில் இன்றும் சாதி அழியாமல் வேரூன்றி இருக்கிறது. கிராமப்புர இந்தியாவில் இன்னும் பிறப்பை வைத்து சமுதாய ஊனமுற்றவர்களாக்கப் படுகின்றனர். தீண்டத்தகாதவர்கள் உயர் சாதியினர் வாழும் பகுதிக்கு நுழைய முடியாது. பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுக்கக்கூடாது. கோவில்களில் நுழையக் கூடாது. டீ கடைகளில் எல்லோரும் குடிக்கும் டம்ளரில் குடிக்க முடியாது. சொந்த நிலங்களில் கூட உரிமை கொண்டாட முடியாது. பள்ளிகளிலும் தீண்டாமை தலை விரித்தாடுகிறது. வகுப்பில் பின்பகுதியில் தனியாகத்தான் உட்கார வேண்டும்.

தலித் பெண்கள் அடிக்கடி பாலியல் பலாத்காரத்திற்குப் பலியாகிறார்கள் தலித் மக்கள் அனைவரும் இழிவான ஈனமான சடங்கு முறைகளைச் செய்ய நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள்.

பெரும்பான்மையான தலித் மக்கள் கல்வியற்றவர்களாக, வேலைவாய்ப்பு இல்லாதவர் களாக, நிலமற்றவர்களாக மிகக் கொடுமையான வறுமையில் வாழ்கிறார்கள், இட ஒதுக்கீடு வழியாக அரசு வேலை பெற்றவர்கள் குறைந்த எண்ணிக்கையில் உள்ள தலித் மக்களே, இவர்கள் கழிவரை சுத்தம் செய்பவர்களாக, மலம் அள்ளுபவர்களாக, செத்த மிருகங்களை அப்புறப்படுத்துபவர்களாக, தோட்டிகளாக,



படிப்பகம்

www.padippakam.com

செருப்புத் தைப்பவர்களாக என இழிவான தொழில்களையே செய்கிறார்கள். உயர் சாதியினரிடம் இருந்து பெற்ற கடனை அடைப்பதற்கு பெரும்பான்மையான தலித் குழந்தைகள் கொத்தடிமைகளாக விற்கப் படுகிறார்கள்.

தேசீய சட்டமும், அரசியல் சட்டத்தின் வாய்ப்புக்களும் இந்தியாவின் சாதி சம்பந்தப்பட்ட வன்முறைகளை வெற்றிகரமாக தீர்த்திருக்கிறது என்று சொன்னால் கூட பெரும்பான்மையான சட்டங்கள், 1980 வன்முறை தடுப்புச்சட்டம், உட்பட செயல்படுத்தப்படாமல் இருக்கின்றன. இந்த வன்முறை தடுப்புச் சட்டத்தைக் கொண்டு வந்ததே முன்னாலிருந்த தேசீயச் சட்டமும் அரசியல் சட்ட அமைப்பும் சாதிய வேறுபாடுகளையும் வன்முறைகளையும் தடுக்கத்தவறிவிட்டது என்பதற்குச் சான்றாகும். இந்தியாவிலும், உலகிலுமுள்ள 2,5 மில்லியன்களுக்கு மேலான மக்கள் தலித் மக்களின் அடிப்படை மனித உரிமைக்காகவும், வன்முறை தடுப்புச் சட்டத்தைச் செயல்படுத்தவும் கையெழுத்து இயக்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள்.

மேலே கூறப்பட்டுள்ள சாதிய அவலநிலையை இந்தியாவின் நீதிமன்றங்கள், அரசியல் சட்டங்கள், சட்டரீதியான அமைப்புகள், தேசிய மனித உரிமைக் குழுவும், ஷெட்யூல்டு வகுப்பினர் - பழங்குடியினர் தேசிய பாதுகாப்பு குழுவும் மீண்டும் மீண்டும் உறுதி செய்கின்றனர். சமூக, அரசியல், பொருளாதார உரிமைகளைப் பெறுவதற்கான தீர்மானிக்கின்ற கூறாக சாதியானது தெற்கு ஆசியாவில் இருக்கிறது.

சாதிய ரீதியான அவலநிலை மனித உரிமைக் குழுவின் நிகழ்ச்சி பட்டியலில் ஆய்வுக்காக தொடர்ச்சியாக இடம் பெறுவதில்லை. அதே சமயம் ஐநா சபையில் உடன்படிக்கைக் குழுக்கள் தங்கள் செயல்திட்டத்தில் சாதிப்பிரச்சனையை அவர்கள் அதிகாரத்திற்குள் எடுத்துச் கொள்கின்ற முயற்சிகளை கவனத்தில் கொள்வது முக்கியமாகும். இனவெறிக்கு எதிரான அகில உலக கருத்தரங்குகள் பல செயல்திட்டத்திற்குள் சாதிய பிரச்சனையை எடுத்துச் செல்வது இன்னும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. 1996-ம் ஆண்டு ஆகஸ்ட்-செப்டம்பரில் நடைபெற்ற (இனவேறுபாடு ஒழிப்பு மாநாட்டில் 49 வது அமர்வில் இறுதி கணிப்பில் ஷெட்யூல்டு வகுப்பினர் - பழங்குடியினர் நிலமை இந்த கூட்ட அமர்வுக்குள் அடங்குகிறது என இனவெறி ஒழிப்புக் குழு உறுதி செய்தது. மாநாட்டின் தீர்மானம் 1-ல் பரம்பரை என்ற சொல் இனத்தை மட்டும் குறிப்பதாக இல்லை, அது ஷெட்யூல்டு வகுப்பினரையும் பழங் குடியினரையும் உள்ளடக்குகிறது எனத் தெளிவாகச் சொல்கிறது. ஐ.நா. சபையின் சிறப்புச் செய்தியாளர் 1999 ஜனவரி அறிக்கையிலும் இனவேறுபாடு, வெளிநாட்டவர் மீது வெறுப்பு, சகிப்புத்தன்மை இன்மை சம்பந்தமாக இதே முடிவுகளை எடுத்திருக்கிறார்கள். ஷெட்யூல்டு வகுப்பினர் கொடுமையான சமூக வேற்றுமைகளை அனுபவித்து இருக்கிறார்கள், முறையற்ற வகையில் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள் என கீழ் மனித உரிமைக்குழு 1997-ல் கோடிட்டுக் காட்டுகிறது. பெண்ணுரிமைக்கு எதிரான வேறுபாட்டு ஒழிப்புக் குழுவும், குழந்தைகள் உரிமைக் குழுவும் ஜனவரி-பிப்ரவரி 2000-ல் இந்திய தலித் குழந்தைகளையும் தலித் பெண்களையும் நடத்துவதில் அதிக அக்கறையை வெளிப்படுத்துகிறது.

பெலாஜியோ கருத்தரங்கில் அடங்கி யிருப்பது போல சாதி அமைப்புக்கள், தலித்களுக்கு, ஜப்பானிய புறாகமின் மக்களுக்கு எதிரான வேறுபாடுகள் பரம்பரை சார்ந்து இழைக்கப்படும் அநீதிகள் குறித்து சுட்டிக்காட்டி இருப்பதில் நாம் மகிழ்ச்சி அடைகிறோம். அகில உலக மனித உரிமை பேரூரையில் இந்த பிரச்சனை குறித்து அக்கறை இன்மையை நிவர்த்தி செய்ய இனவேறுபாடு, வெளிநாட்டவர் மீது வெறுப்பு, சகிப்புத்தன்மை இன்மை அகில உலக எதிர்ப்பு மாநாடு வாய்ப்புக்களை வழங்க வேண்டும். சாதியைச் சார்ந்த பிரிவினைகளையும், வன்முறைகளையும், மற்ற அவல நிலைமைகளையும் மறைமுக அரசியல் அமைப்பைப் போல பொறுத்துக் கொள்ள முடியாது என அறிவிக்க வேண்டும். இந்த மாநாடு அதற்கு மாற்றாக ஒர் அகில உலக செயல்பாட்டை உருவாக்க உதவும் என்பது நமது நம்பிக்கை. அகில உலக இனவேறுபாடு எதிர்ப்பு மாநாட்டு தயாரிப்பு குழு உறுப்பினர்களை பின் வரும் கோரிக்கைகளை நிறைவேற்ற அழைக்கின்றோம்.

ஆசியாவில் நலிந்திருக்கும் மக்களுக்கு எதிரான வேறுபாடுகளையும் அகில உலக

(தொடர்ச்சி 18-ம் பக்கம்)



படிப்பகம்

www.padippakam.com

# கடைசியில் சசிகலா படுகொலை

பட்டி தமிழ் விரும்பி

விழுப்புரம் மாவட்டத்தில் உளுந்தூர் பேட்டை அருகே உள்ள மலையடிக் குண்ணத்தூர் என்ற கிராமத்தில் தலித் இளம் பெண்ணை கற்பழித்து கொன்று புதைத்துவிட்டச் செய்தியை கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு நேரடி விசாரணையில் இறங்கினோம்.

எம் குண்ணத்தூரில் படையாச்சிகளின் ராஜ்ஜியம் தலைத்தூக்கி நிற்கின்றது என்பதை பேருந்தை விட்டு இறங்கியதுமே புரிந்து கொண்டோம். இக்கிராமத்தில் இரண்டு பேருந்து நிறுத்தங்கள் முதல் பேருந்து நிறுத்தம் தலித் மக்கள் குடியிருக்கும் பகுதியிலும், மற்றொன்று படையாச்சிகள் வாழும் பகுதியிலும் உள்ளது.

ஆனால் முதல் நிறுத்தத்தில் பேருந்துகளை நிறுத்தக்கூடாது என்பது படையாச்சிகளின் கண்டிப்பான உத்திரவு தலித் மக்கள் எவ்வாறு ஒடுக்கப்படுகின்றார்கள் என்பதற்கு இது ஆதாரம்.



தண்டபாணி

நாம் படையாச்சிகளின் பேருந்து நிறுத்தத்தில் இறங்கினோம். புதிய முகமான நம்மை ஏற இறங்க பார்த்தது படையாச்சி கும்பல்.

அக்கிராமத்தில் உள்ள பெரும்பான்மையான நிலங்கள் படையாச்சிகள் வசம் இருப்பதால் தலித் மக்களை ஒடுக்குவது எளிதாகிவிடுகின்றது. இதில் குறிப்பாக அண்ணாமலை அவரது மகன்கள் முருகன், தண்டபாணி ஆகிய படையாச்சிகள் அதிக படியாக நிலங்களையும் ரைஸ்மில்கள், லாரிகள் ஆகியவை களை வைத்துக் கொண்டு தலித் பெண்களின் கற்பை சூறை யாடுவது வழக்கம்.

இவர்கள் செய்யும் காம லீலைகளுக்கு உடந்தையாக ஊராட்சி மன்ற தலைவர் என். ராமலிங்க படையாச்சி, துணைத் தலைவர் சின்னத்தம்பி கவுண்டர் அண்ணாமலையின் கைத்தடிகளான ஏழுமலை, குமார், ஆகியோர் செயல்படுகிறார்கள் என்பது படையாச்சிகளின் பகுதியிலிருந்தே நமக்கு கிடைத்த தகவல்கள்.



சசிகலா

ஒரு வழியாக தலித் மக்கள் வாழும் பகுதிக்குச் சென்றோம். அப்பகுதி முழுவதும் சசிகலா என்ற இளம் பெண்ணை பறிகொடுத்த சோகத்தில் மூழ்கியிருந்தது.

கற்பழித்து கொலை செய்யப்பட்ட சசிகலா வீட்டை அடைந்தோம். மகளை பறிகொடுத்து மீளா துயரத்தில் அடங்கி போயிருந்தது அக்குடும்பம் அடக்க முடியாத அழுகையோடு சசிகலாவின் தந்தை கோவிந்தராஜ் நம்மிடம் பேச ஆரம்பித்தார். சார், ஆசையா வளர்த்த பொண்ணுங்க கஷ்டப்பட்டு தையல் பள்ளியில் படிக்க வைச்சேங்க. எங்க குடும்பத்தல இருக்கிற அனைவருக்கும் இவ மேலதான் ரொம்ப பிரியம். எல்லார்கிட்டேயும் செல்லமாக இருப்பாள் வெளியில் எந்த வேலைக்கும் அனுப்பமாட்டோம். அநியாயமாக எம்பொண்ணை பறிகொடுத்துட்டு நிற்கிறோம். எங்க பொண்ணு இப்ப இல்லாதது எங்க ஒவ்வொருத்தருக்கும் உயிரே போனது போல இருக்குதுங்க என அதற்குமேல் வார்த்தையில்லாமல் தேம்பி, தேம்பி அழுதார்.

பிறகு இறந்து போன சசிகலாவின் அண்ணன் சக்ரவர்த்தி தொடர்ந்து நம்மிடம் பேசினார். 7-ம் தேதி



படிப்பகம்

www.padippakam.com


சசிகலா கற்பழிக்கப்பட்ட இடம்

அன்று சடையப்பன் என்ற எங்க சொந்தக்காரரு செத்துட்டதால நாங்க யாரும் கழனிக்கு போகாம சாவு வீட்டாண்டேயே இருந்தோம்.

எங்க வீட்டில ரெண்டு ஆட்டுக்குட்டி இருக்குது. வழக்கமாக அதை எங்க வயல்ல கட்டிட்டு வருவோம். அன்னிக்கினு பார்த்து பத்து மணி வரையலும் ஆடு கட்டிப்போட்டுட்டு இருந்ததால எங்க அப்பா சசிகலாவிடம் ஆட்டை கூட்டிட்டு போயி கழனியில கட்டிப்போட்டுட்டு வரச்சொன்னாரு. அதனால சசிகலா கழனியில ஆட்டைக் கட்டிட்டுட்டு கம்மங் கொல்லையில புள்ளு பிடுங்கினு இருந்தது. எங்க கழனிக்கு பக்கத்து கழனிகாரரான படையாச்சி யினத்தைச் சேர்ந்த தண்டபாணி என்கிறவன் தனியாய் இருந்த சசிகலாவை கற்பழித்து சாவடிக்சுட்டான் என தடுமாறினார்.

மேலும் விவரம் அறிய விசாரணையில் இறங்கினோம். சசிகலாவை கற்பழித்து, கொலை செய்த சாதி இந்துவான தண்டபாணி இரண்டு மனைவிகளுக்கு சொந்தக்காரன் முதல் மனைவி தவமணி கர்ப்பமாக இருக்கும்போதே தன்னுடைய காமவெறிக்கு ஆள் தேடி அதே ஊரைச்சார்ந்த செல்வம்மாள் என்பவரை வலுக்கட்டாயமாக கற்பழித்து வேறு வழியில்லாமல் இரண்டாவது மனைவியாக்கிக் கொண்டான். சசிகலாவை கற்பழித்து கொலை செய்த அன்றோடு இவனுடைய முதல் மனைவி தவமணிக்கு குழந்தை பிறந்து 21-நாட்களே ஆகின்றன. இரண்டாவது மனைவி செல்வம்மாள் 8-மாத கர்ப்பமாக இருந்தாள்.

இந்த நிலையில் வயலில் புல் அறுத்துக் கொண்டிருந்த சசிகலாவின் மீது இந்த தண்டபாணிக்கு எப்பொழுதும் ஒரு கண் இருந்து கொண்டே இருந்தது. இதை பலர் நம்மிடம் தெரிவித்தனர். அன்றைய தினம் தனிமையில் குறிப்பிட்ட தூரம் வரையில் யாரும் இல்லாத சமயமாக இருந்ததால் காமவெறி பிடித்த தண்டபாணிக்கு நல்ல வாய்ப்பாக அமைந்தது.


இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சசிகலாவிடம் நைசாக பேச்சுக்கொடுத்து கண் இமைக்கும் நேரத்திற்குள் சசிகலாவை குண்டு கட்டாக தூக்கிக்கொண்டு அருகிலிருந்த துவரை காட்டிற்குள் சென்றான். இவனிடமிருந்து விடுபட சசிகலா எவ்வளவோ போராடியும் பலனேதுமில்லை. கடைசியில் காட்டுமிராண்டித்தனமாக கற்பழித்து சின்னா பின்னமாக்கியுள்ளான்.

மயங்கிய நிலையில் இருந்து சசிகலாவின் செய்தி வெளியில் தெரிந்து விடாமல் இருப்பதற்காக கழுத்தை நெறித்தும், பெண் உறுப்பில் மண்வெட்டியால் வெட்டி கிழித்தும், மார்பை கடித்து குதறியும் கொடூரமான முறையில் கொன்று விட்டு. தனக்கு சொந்தமான நில பாழடைந்த கிணற்றில் தூக்கி வீச முயற்சித்தான். அப்போது அவளுடைய பெரியப்பாவின் மகன் சேகர் தனது கரும்பு தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்ச வருவதைக் கண்டவுடன் சசிகலாவின் உடலை கரும்பு தோட்டத்திற்குள் வீசிவிட்டு சென்றுவிட்டான்.

சேகர் அவ்விடத்தை விட்டு நகரும் வரை காத்திருந்து, மாட்டு வண்டியில் வைத்திருந்த கடப்பாறையால் தன்னுடைய கரும்பு தோட்டத்திலேயே அவசர அவசரமாக குழி தோண்டி சசிகலாவின் உடலைப் புதைத்து விட்டு அந்த பாத்திக்கு மட்டும் தண்ணீர் பாய்ச்சிவிட்டு புதைக்கப்பட்ட குழி வெளியில் தெரியாதவாறு மறைத்தான்.

சிறிது நேரம் கழித்து சசிகலாவின் அண்ணன் சேகர் தன் தங்கையை தேடிக்கொண்டு வந்தார் சசிகலா அணிந்திருந்த செருப்பும், மேல துண்டும் ஒரு இடத்தில் இருப்பதை கண்டு பல இடங்களில் தங்கையை தேடியும் காணாததால் வீட்டிற்கு சென்று முறையிட்டான். எப்படியும் வந்து விடுவாள் என்று வீட்டிலிருந்தவர்கள் காத்திருக்க மாலை நேரமாகியும் சசிகலா வீடு திரும்பவில்லை. உடனே சந்தேகப்பட்ட பெற்றோர்களும், ஊராரும் மீண்டும் வயல்வெளிக்கு சென்று தேட ஆரம்பித்தனர்.

(தொடர்ச்சி 17-ம் பக்கம்)


சசிகலா புதைக்கப்பட்ட இடம்



படிப்பகம்

(5 ஆம் பக்க தொடர்ச்சி)
www.padippakam.com

சமாதிக்கு மத்தியில் மண்டபம் கட்டிவிட்டால், சாதி இந்துக்களின் பகையைப் பெற்று விடுவோமோ என்ற ஓட்டு பயமா?

30 கோடி தலித் மக்களின் ஒப்பற்ற தலைவன், சமுதாய விடுதலைக்கு போராடிய மாவீரன், பெண் விடுதலைக்கு வித்திட்ட சமுதாய விடிவெள்ளி அண்ணல் அம்பேத்கருக்கு ஒரு ஒதுக்குபுறமாக, சாதாரண மனிதனுக்கு கட்டப் படும் நினைவு மண்டபம் போன்று எந்தவித அலங்காரமும் இல்லாமல், கலை வேலைப் பாடுகளும் இல்லாமல் சாக்கடையோரம், மணிமண்டபம் கட்டப்பட்டு அதில் ஒரு சிறிய சிலையொன்றையும் வைத்து, அவசர அவசரமாக போஸ்டர்கள் அச்சடித்து அதில் தலித் இன தலைவனுக்கு இந்தியாவிலேயே தான்தான் மணிமண்டபம் கட்டிவிட்டதாகவும் அதன் திறப்பு விழாவிற்கு பலதரப்பட்ட தலைவர்களை அழைத்து அதில் கருணாநிதி தாழ்த்தப் பட்டவர்களின் சம்பந்தி, தாழ்த்தப் பட்டவர்களின் பாதுகாவலன், சாதியை ஒழிக்க வந்த சமத்துவத் தலைவன் என அவரை புகழ்ந்து பேச ஒரு கூட்டம், மணிமண்டபம் திறப்பு என்ற போர்வையில் நான் தலித் மக்களின் நீண்ட நாள் எண்ணத்தை நிறைவேற்றிவிட்டதாக ஒரு பொய்யான விளக்கம் வேறு.



உலகத் தலைவருக்கு அரசு அமைத்த சிறிய சிலை

5 ஏக்கர் நிலப்பரப்பில் 5 கோடி செலவில் மணிமண்டபம் கட்டியதாக கணக்கு. ஆனால் தற்போது மண்டபம் மற்றும் பூங்காவிற்கு ஒதுக்கியுள்ள இடம் 5 ஏக்கர் இருக்காது என்பதுதான் உண்மை.

அண்ணா சமாதியை புதுப்பிக்க 10 கோடியும், ஏற்கனவே 3 கோடி செலவு செய்து கட்டிய எம்.ஜி.ஆர் மணிமண்டபத்தை மீண்டும் 10 கோடியில் அவரவர் விருப்பத்திற்கு மாற்றி அமைத்து அழகு பார்த்து வருகின்றனர்.

ஆனால் அம்பேத்கர் மணிமண்டபத்திற்கு 5 கோடியில் மண்டப பணி. இதை வைத்துப் பார்க்கும்போதே தலித்துக்கள் மட்டு மல்ல தலித் தலைவன் பெயரில் வைக்கப்பட்ட மண்டபத்திலும், எப்படி ஏமாற்றப் படுகிறார்கள் என்பது நடுநிலையாளர்கள் மத்தியில் பரவலாக பேசப்பட்டு வருகிறது.

மணிமண்டபத்தில் மணிமண்டபத்தை தவிர எந்த வேலையும் இதுவரை முழுவதுமாக முடிக்கபடவில்லை. மண்டபத்தை பார்க்கவரும் பயணிகள் ஓய்வு எடுக்க பூங்காக்கள் இல்லை, மணிமண்டபத்தின் எதிரில் ஒரு சிறிய சாதாரண சிலை, பார்க்க வருகின்றவர்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைக்கூட சரியாக முடிக்காமல் அவசரக்கோலத்தில் இந்த அலங்கோல விழா தேவையா?

இந்த மணிமண்டபத்திற்கு இதுவரையில் பேருந்து நிறுத்தம் கூட அமைக்கப்படவில்லை! அவ்வழியாக செல்லும் எந்த பேருந்தும் அம்பேத்கர் மணி மணிமண்டபத்தில் நிற்பதும் இல்லை. பேருந்தில் ஏறி மணிமண்டபத்திற்கு பயணச் சீட்டுக்கேட்டால் அங்கு பஸ் நிற்காது என்பதுதான் இன்று வரையில் உள்ள உண்மையான நிலை.

வரும் சட்ட மன்ற தேர்தலில் அம்பேத்கரின் பெயரை முன் வைத்து எப்படியாவது தலித் மக்களின் ஓட்டுக்களை பெற்றுவிட வேண்டும் என்ற ஒரே எண்ணத்தின் அடிப்படையில் அரசியலுக்காக அள்ளித் தெளிக்கப்பட்ட அலங்கோலமே அம்பேத்கர் மணிமண்டபம், என்பதை தமிழகத்தில் உள்ள கோடிக்கணக்கான தலித் மக்கள் உணராமல் இல்லை.


படிப்பகம்

www.padippakam.com

# அரசியல் சட்டத்திற்கு அறுவை சிகிச்சை

நமது அரசியலமைப்புச் சட்டத்தை மறுஆய்வு செய்ய முன்வந்துள்ளது பா.ஜ.க. அரசு இந்நிலையில் இச்சட்டத்திலுள்ள சில அம்சங்களை தெரிந்து கொள்வது அவசியம். இந்த அம்சங்கள் மாற்றப்படவேண்டுமா?

23.(1) மனிதர்களை விற்பதும் வாங்குவதும், வற்புறுத்தி வேலை வாங்குவதும், பிச்சை எடுக்கச் செய்வது ஆகியவை தடை செய்யப் பட்டுள்ளன. அப்படி அத்துமீறிச் செயல்படுவோர்க்கு அத்தகைய குற்றத்துக்காகச் சட்டப்படி தண்டனை விதிக்கப்பட வேண்டும்.

2. பொதுக்காரியங்களுக்காகக் கட்டாயப்படுத்தி வேலை வாங்கக் கூடாது என்று இந்தக் கோட்பாட்டில் உள்ளவை அரசாங்கத்தைத் தடுக்க முடியும். அத்தகைய வேலையைச் சாதி, சமயம், இனம், வகுப்பு என்ற பாகுபாடு காட்டாமல் வாங்கப்பட வேண்டும்.

24. பதினான்கு வயதுக்குக் குறைந்த குழந்தைகளை எந்தத் தொழிற்சாலையிலும், சுரங்கத்திலும் வேறு அபாயகரமான வேலைகளிலும் எவரும் அமர்த்தக்கூடாது.

வழிபாட்டுச் சுதந்திரம்

25. (1) பொது ஒழுங்கு, ஒழுக்கம் மற்றும் நல வாழ்வு ஆகியவற்றுக்கும், இந்தப் பகுதியில் கூறப்பட்டுள்ள மற்றவற்றுக்கு ஆட்பட்டும், எல்லாரும் தம் மனசாட்சிப்படி செயல் படுவதற் குரிய சுதந்திரம் உடையவர்களா வார்கள். தம்தம் மதத்தைத் தழுவ, மேற்கொள்ள மற்றும் பரப்புவதற்கு உரிமை உடையவர்களாவர்.

(2) இந்தக் கோட்பாட்டில் உள்ளவை எதுவும்,

(அ) மதவழிபாட்டுடன் தொடர்பு டைய பொருளாதாரம், நீதி, அரசியல் மற்றும் இதர மதச் சார்பற்ற செயல்பாட்டுக்கு,

(ஆ) சமுதாய நல்வாழ்வுக்கும், சீர்திருத்தத்துக்கும் அல்லது இந்துக்களுடைய கோவில்கள் மற்றும் மதச் சார்பற்ற இடங்களை இந்து மதத்தைச் சார்ந்த எல்லா வகுப்பினர்களும் பாகுபாடின்றித் திறந்து வைக்கப் படுவதற்குத் தேவைப்படும் சட்டத்தை அமுல் படுத்துவதற்கும் அல்லது அத்தகைய புதிய சட்டத்தை உருவாக்கு வதற்கும் இந்த அரசைத் தடுக்க முடியாது.

விளக்கம் - 1 (2) ஆவது கூறின் (6) கிளைக்கூற்றின்படி உள்ள இந்து என்ற சொல், சீக்கிய, ஜைன, புத்த மதங்களைச் சார்ந்தவர்களையும் குறிப்பதோடு, இந்துக்கோயில், மதச் சார்பற்ற இடங்கள் என்பதும் அத்தகைய சீக்கிய, ஜைன, புத்த சமயக் கோவில் களையும் மற்ற மதச் சார்புற்ற இடங்களையும் குறிப்பதாகும்.

26. பொது ஒழுங்கு, ஒழுக்கம் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றுக்குக் கட்டுப்பட்டு, ஒரு மதத்தைச் சார்ந்தவர்களும் அல்லது அம்மதப் பிரிவைச் சார்ந்தவர்களும்

(அ) மதத்துக்காகவும், அறங்களுக்காகவும், அமைப்புக்களை உருவாக்குவதற்கும், அமைப்ப தற்கும், பராமரிப்பதற்கும் :

(இ) சொத்துக்களைப் பெறுவதற்கும், உரிமையுடன் வைத்திருப்பதற்கும் மற்றும் உரிமை உடைய வர்களாவர்.

27. ஒரு குறிப்பிட்ட மத அல்லது மதம் சம்பந்தப் பட்ட அமைப்புக்களைப் பராமரிப்பதற்காகவும், உருவாக்குவதற்காகவும் செலவிடப்படும் பணத்துக்கு வரி ஏதும் செலுத்தப்படவேண்டும் என்று எவரையும் வற்புறுத்தக்கூடாது.

28. (1) அரசு நிதியிலிருந்து நிர்வகிக்கப்படும் கல்விச் சாலைகளில் எத்தகைய மதபோதனையும் செய்யப்படக் கூடாது.

(2) மத போதனைக்கென ஓர் அறக்கட்டளை அல்லது கொடைகள் மூலம் உருவாக்கப்பட்டுள்ள கல்விச் சாலைகளுக்கு, அரசாங்க நிதி உதவியின் மூலம் அவை நடைபெற்றாலும், (1) ஆவது கூற்றிலுள்ளவற்றை அனுசரிக்கத் தேவையில்லை.

(3) அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அல்லது அரசாங்க உதவித் தொகை பெற்று நடத்தப்படும் கல்விச் சாலைகளில் இருப்போரை, அத்தகைய கல்விச்சாலைகளில் அல்லது அவற்றுடன் இணைந்த கட்டிடத்தில் நடத்தப்படும் மத போதனைகளிலும், அல்லது மத வழிபாடுகளிலும் அத்தகைய நபரை அல்லது அவர் பாலராக இருக்கும்போது அவருடைய பாதுகாவலரின் ஒப்புதலின்றிப் பங்கேற்க வேண்டுமென்று கேட்கக்கூடாது.

*தொடரும்*

- வழக்குரைஞர் பழனிச்சாமி, செங்கை.



படிப்பகம்

www.padippakam.com

# தண்ணீர் தண்ணீர்

உயர்திரு ஐயா அவர்களுக்கு,

தண்ணீருக்காக, அல்லியாளமங்கலம் கிராம தாழ்த்தப்பட்ட மக்கள் கண்ணீரோடு எழுதும் மடல். நாங்கள் குடிநீருக்காக வாரம் ஒரு முறை காத்திருக்க வேண்டும் அதுவும் ஒரு மணி நேரம் தான் எங்கள் பகுதிக்கு தண்ணீர் வரும். எங்களது குடிநீரை பார்ப்பது தங்கத்தைப் பார்ப்பது போல உள்ளது. இதனால் எங்கள் கிராமத்தில் தண்ணீர் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இதுபற்றி ஊர் தலைவர், சேர்மேன், அதிகாரிகள் ஆகியோரிடம் சொல்லிப் பார்த்தோம் எந்த ஒரு பயனும் இல்லை. எனவே எங்கள் ஊருக்கு நிரந்தரமாக தண்ணீர் வருவதற்கு அரசை நிர்பந்திப்ப தற்கான வழிமுறைகளையும் ஏற்பாடுகளையும் செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கி றோம்.

இப்படிக்கு,

**தண்ணீருக்காக வாடும்**

**அல்லியாளமங்கலம் தாழ்த்தப்பட்ட மக்கள்.**

திருவண்ணாமலை . மாவட்டம், அல்லியாளமங்கலம் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் பகுதியில் குடிநீர் பஞ்சம் தீர வழிவகை செய்யும்படி அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தின் நிறுவனர் வழக்குரைஞர் ஐயா எல். யேசுமரியான் அவர்களிடம் அளிக்கப்பட்ட மனு.

நாடு சுதந்திர பொன்விழாவை கொண்டாடுகிறது. இந்நேரத்தில் ஒரு கிராமம் குடிதண்ணீருக்காக தத்தளிக்கலாமா?

**களம் வாசகர்களே!**
உங்கள் சந்தா/நன்கொடை வரவேற்கப்படுகிறது.
ஆண்டு சந்தா ரூ. 50/-

## பயிற்சி பாசறை

19-07-2000 அன்று கடலூர் தந்தை பெரியார் அரசினர் கலைக்கல்லூரி ஆதிதிராவிடர் மாணவர் விடுதியில் ஒரு நாள் பயிற்சி பாசறை நடைபெற்றது. இதில் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தின் மாநில துணை கொள்கை பரப்பு செயலர் தலித் எம். ஜெயக்குமார் களம் செய்தி ஆசிரியர் சிந்தை ராஜன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினர்.

இப்பயிற்சி பாசறையில் சுமார் 50 மாணவர்கள் பங்கேற்றனர்.

## பட்டயமளிப்பு விழா

அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தின் சார்பாக நடத்தப்படும் தையற்பயிற்சி பள்ளி மாணவிகளின் 1999 - 2000 ஆண்டிற்கான பட்டயமளிப்பு விழாவில் மாணவிகள் சான்றிதழ் பெற்றனர்.



செங்கல்பட்டு மாணவிகள்



கேளம்பாக்கம் மாணவிகள்



படிப்பகம்

3ம் பக்கத் தொடர்ச்சி
www.padippakam.com



சசிகலாவின் பெற்றோர்கள்

தண்டபாணி ஒரு பாத்தியில் மட்டும் தண்ணீர் பாய்ச்சியிருந்ததை கண்டு சந்தேகப்பட்டு பார்த்தபோது சசிகலாவின் கை, கால்கள் மட்டும் வெளியில் தெரிந்திருப்பதைக் கண்டு அனைவரும் அழுது புரண்டனர், ஊரே துடித்து போனது.

பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே போஸ்ட்மார்ட்டம் செய்ய போராடினர். பிறகு கற்பழித்து கொலை செய்யப்பட்டதை தண்டபாணியும் போலிஸ் விசாரணையில் கற்பழித்து கொலை செய்ததை ஒப்புக் கொண்டான்.

அநியாயமாக ஒரு உயிரை பறிகொடுத்து விட்டு, ஈரமண் காய்வதற்குள் தி.மு.க பிரமுகரும், ஊராட்சி மன்ற துணைத் தலைவருமான சின்னத்தம்பி, அ.தி.மு.க கிளைச்செயலர் குமார், ஊராட்சி மன்றத் தலைவரும், தி.மு.க செயலாளருமான ராமலிங்கம் ஆகியோர் தலித் மக்களிடம் டேய் மரியாதையா கேஸை வாபஸ் வாங்கிடுங்கடா, ஊர்ல நடக்காதது நடந்துபோச்சு, இப்ப மட்டும் புதுசா நடக்குதா கண்டுக்காம போகவேண்டியதுதானே. மரியாதையாக அவர்களை கூப்பிட்டு கேஸை வாபஸை வாங்க சொல்லுங்கடா இல்லையென்னா ஜென்மத்துக்கும் இந்த ஊர்ல உங்களால நிம்மதியாக வாழமுடியாது. ஒன்னரை ஏக்கர் நிலமும், இல்லன்னா ஐம்பதாயிரம் ரூபாய் பணமும், கொடுக்க ஏற்பாடு பண்றோம் என்று ஆணவத்தோடு மிரட்டி வருகின்றனர்.

இதனால் கொதிப்படைந்த தலித் மக்கள் சாதி இந்துக்கள் பகுதிக்கு வேலைக்கு மறுத்து வருகின்றனர். இந்த தலித் மக்கள் புறக்கணிப்பை கேள்விப் பட்ட பஞ்சாயத்து தலைவர் ராமலிங்கம் மேளம் அடிக்க மறுத்தவரை தாக்கியுள்ளார். தலித் மக்கள் பகுதிக்கு குடி நீரையும் நிறுத்திவிட்டார்.

படையாச்சிக்கு தமிழக அரசு சிலை வைக்க முடிவு செய்துள்ளது. இச்சிலை சசிகலாவின் இடுகாட்டில் அமைக்கப்படுமா?

# ராஜ் நாராயண்

ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்புக்களத்திலே-மிகத் தீவிரமாக தன்னை ஒப்படைத்துக் கொண்டவர் ராஜ் நாராயண். சோஷலிஸ்ட் கட்சியிலே - டாக்டர் லோகியா தலைமையிலே தன்னை இணைத்துக் கொண்ட காலத்திலிருந்து வகுப்பு வெறி ஆா.எஸ்.எஸ். காரர்களுக்கு இவர் மிகப்பெரிய சிம்ம சொப்பனம்! ஜனதா கட்சிக்குள் ஆர்.எஸ்.எஸ். வகுப்புவாத ஆதிக்கம் தலைதூக்கியபோது - போர்க்குரல் எழுப்பி வெளியே வந்த பெருமை அவருக்கு உண்டு! ஆர்.எஸ்.எஸ். கும்பலின் பல்வேறு சதித்திட்டங்களையும், மோசடிகளையும் இவர் வெளிச்சத் துக்குக் கொண்டு வந்தவர்!

ராஜஸ்தான் மாநிலத்தில் கோட்டா என்ற ஊரில் அவர் பேசிக்கொண்டிருக்கும் போது - **(24-10-79)** ஆர்.எஸ்.எஸ். கூட்டம் இவரை குறிவைத்து தாக்கியது. மண்டைபிளந்து போய்-ரத்தம் சொட்டச் சொட்ட உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டார். ஆத்திரமடைந்த பொதுமக்கள் கூட்டத்திலேயே ஆர்.எஸ்.எஸ். காரர்களை வளைத்துப் பிடித்து தாக்கினர்.

அந்தக் காலகட்டத்தில்-தங்கள் மோசடிகளை அம்பலப்படுத்தும் - ஜனதாக்கட்சித் தலைவர்கள் எல்லோரையுமே தீர்த்துக்கட்ட அவர்கள் ஒரு சதித்திட்டத்தையே தீட்டினர்.

அப்போது-அன்றைய பிரதமர் சரண்சிங் **28-10-97** அன்று ஒரு அறிக்கை விடுத்தார்.

கோட்டாவில் ராஜ்நாராயண் மீதும் மையுரில் ஜார்ஜ் பெர்ணான்டஸ் மீதும், ராஜ் கோட்டில் சந்திராவதி மீதும் பி.பி மவுரியா மீதும் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்தக் கோழைத்தனமான தாக்குதல்களைக் கண்டனம் செய்ய வார்த்தைகளே கிடையாது. இந்திய மக்களும், ஜனதா கட்சியில் உள்ள ஜனநாயக வாதிகளும் நாட்டில் அரசியல் முறையைப் பாழாக்க முற்பட்டுள்ள ஆர்.எஸ்.எஸ். பாசிசத்திலிருந்து படிப்பினை பெற வேண்டும்.

என்று மறைந்த முன்னாள் பிரதமர் சரண்சிங் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்!

நாட்டில் வகுப்புக் கலவரங்களை நடத்தி ரத்த ஆறு ஓடவிட்டு பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொண்ட பார்ப்பன நச்சுக்கூட்டம் இப்படி பல்வேறு தலைவர்களின் உயிரையும் குடிக்க நினைத்தது!

இந்த காட்டுமிராண்டித்தனங்களை-நாகரீக சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ள முடியுமா?

கருத்துக்களை கருத்துக்களால் சந்திக்க முடியாதவர்கள் - கருத்துக்களை - கத்திகளாலும் துப்பாக்கிகளாலும் சந்திக்க துடிப்பதிலி ருந்தே-இவர்களின் பார்ப்பனர் பாசிச வெறி விளங்குகிறது அல்லவா?

- விடுதலை ராஜேந்திரன்/


படிப்பகம்

www.padippakam.com



11ம் பக்கத் தொடர்ச்சி)

இனவேறுபாடு எதிர்ப்பு மாநாடு செயல் திட்டத்தில் தெளிவாக இனவேறுபாடு என்ற வரையறைக்குள் உள்ளது என எடுத்துரைக்க வேண்டும். எனவே தலித்துக்களும், ஜப்பானிய புறாக்குமின்களம், இதே சூழலிலுள்ள மற்ற மக்களும் தொடர்ச்சியாக இடைவிடாமல் துன்ப துயரத்துக்கு பரம்பரையின் அடிப்படையில் உள்ளாக்கப்பட்ட குழுக்கள் என்று ஏற்றுக் கொள்ளபடவேண்டும்.

மாநில அளவிலும், தேசிய அளவிலும் என்.ஜி.ஓக்களோடு இணைந்து அகில உலக இனவேறுபாடு எதிர்ப்பு மாநாட்டுக்குத் தயார் செய்ய ஆசிய அரசுகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் தலித்களும், ஜப்பானிய புறாமின்களும் துன்பப்பட்ட சாதிய ஒடுக்குமுறைகளுக்கும், பரம்பரை சார்ந்த வேறுபாடுகளுக்கும் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.

அந்தந்த நாடுகளின் இனவேறுபாடு செய்தியாளரை அழைத்து இந்த சாதிய வேறுபாடுகளையும், பரம்பரை வேறுபாடு களையும் சார்ந்த வடிவங்களை ஆராய்வதற்கு அழைப்புக் கொடுக்க அரசுகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

பொருத்தமான நாடுகளில் சாதிய பரம்பரை சார்ந்த வேறுபாடுகளை எதிர்த்து போராட இருக்கின்ற செயல்பாடுகளை மறு ஆய்வு செய்ய வேண்டும்.

**வாழ்த்துக்கள்**

மாவட்ட மாநாடு காணும் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க காஞ்சி மாவட்ட நிர்வாகிகளை வாழ்த்து கிறோம்.

- ஆசிரியர்.

# காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதிய கிளைகள்

காஞ்சிபுர மாவட்டத்தில் ஆமையாம்பட்டு, குண்ணுக்காடு, கழிப்பட்டுர் ஆகிய கிராமங்களில் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தின் புதிய கிளைகள் துவக்கப்பட்டன.





படிப்பகம்

www.padippakam.com

2ம் பக்கத் தொடர்ச்சி

அதோடு விட்டுடாம விழாபள்ளம் குறிஞ்சுப் பாடி காவல் நிலைய கட்டுப்பாட்டு எல்லையில் உள்ளது. 18ம் தேதி சம்பந்த மில்லாத வடலூர் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து விஜயை தேடி வந்தாங்க. தேடிவந்த சி.ஐ.டி. இளங்கோ கூட வந்த ஏட்டுகிட்டேயும் ''விஜயை குறிஞ்சிப்பாடி காவல் நிலையத்திற்கு நானே அழைச்சினு வந்துடுறேனு'' சொல்லி அனுப்பி விட்டேன் என்றார் வீர பெருமாள்.

மறு நாள் பாச்சிரப்பாளையத்தைச் சார்ந்த பால முருகன் என்ற வன்னியர். விழப்பள்ளத்தை சார்ந்த ராஜேந்திரனிடம் கூலிக்கு மாட்டு வண்டி பேசி பாச்சாரப்பாளையத்திற்கு அழைத்துக் கொண்டு சென்றார். போகும் வழியில இருபது பேரு கொண்ட வன்னியர் கும்பல் பாலமுருகனை ''ஏண்டா' பற நாயே எவ்வளவு தைரியமிருந்தா எங்க ஊரு எல்லைக்குள் நுழைவே'' என்று சொல்லி கொடூரமாக அடித்து உதைத்தனர். மயங்கிய நிலையில் கிடந்த பால முருகனை தலித் மக்கள் மீட்டு வந்தனர். இது போன்ற சம்பவங்கள் அப்பகுதியில் நடப்பது சகஜம்.

21.6.2000 அன்று காலையில ஆறரை மணிக்கு பாச்சராப்பாளையத்தைச் சார்ந்த இருநூறு மேற்பட்ட வன்னியர்களின் கும்பல் பயங்கர ஆயுதங்களுடன் திடிரென தலித் பகுதிக்குள் புகுந்து கண்ணில் பட்டவர்களையும் வீடுகளை யும் அடித்து நொறுக்கி, சேதப்படுத்தினார்கள். இதில் அனைத்து வீடுகளும் பெருத்த சேதமானது.


உடைக்கப்பட்ட பீரோ


கொலை செய்யப்பட்ட இடம்

இந்த எதிர்பார்க்காத தாக்குதலால் இன்று தலித் மக்கள் நடுத்தெருவில் நிக்கின்றனர்.

இது சம்பந்தமாக காவல்துறை உட்பட அனைத்து துறைக்கும் புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல், பாதிக்கப்பட்ட தலித் மக்களையே கைது பண்ணி சிறையிலடைத் துள்ளனர்.

22ம் தேதி கடலூர் கோட்டாட்சியர் தலைமை யில் சமாதானக் கூட்டம் நடைபெற்றது. இதற் கிடையில் நிர்மலா என்கிற தலித் பெண் 24ம் தேதி இரவு மர்மமான முறையில் கொலை செய்யப் பட்டு கிடந்தாள்.

''எங்க மீது வன்னியர்களின் தாக்குதல் தொடர்ந்து கொண்டே போகுதுங்க, போலிஸ் பாதுகாப்பும் இல் லைங்க பாது காப்பு தேடிஅலையுறங்க'' என முடித்தனர் தலித் மக்கள் ஒரே குரலில்.


வீர பெருமாள்

''தலித் மக்கள் தான் தமிழகத்தில் பெரும் பாலான கலவரங் களை உண்டுபண்ணுகிறார்கள்'' என கூறிக் கொண்டு வரும் ராமதாசுக்கு வன்னியர்களின் அட்டகாசத்தால் தலித் மக்கள் அழிந்து போவதை நிறுத்த முடியுமா? தலித்தை முதல்வராக்க வேண்டிய அவசியமில்லை.

- நமது சிறப்பு நிருபர்



படிப்பகம்

www.padippakam.com

# தீண்டாமை – ஒரு சந்திப்பு



இந்தியாவில் தீண்டத்தகாதவர்களாக ஒரு இனம் நடத்தப்படுகிறது. எந்த இனத்தில் பிறந்தாலும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களையும் தீண்டத்தகாதவர்களாக நடத்துகின்றனர்.

தொழு நோயால் பாதிக்கப்பட்ட இவர் [எதிரில்] தீண்டத்தகாதவர்களின் தலைவன் அம்பேத்காரின் உருவத்தை தொட்டு வரைவது நம் மனதைத் தொடவில்லை.

இரண்டு தீண்டாமைகள் ஒன்றையொன்று தொடுகின்றன. இத்தீண்டாமைகளைத் தொட்டு அரவணைக்கும் நாளே சுதந்திர நாள்!



*தீபா கலைச்செல்வி,*
*பனிரெண்டாம் வகுப்பு*
*மதிப்பெண் : 970*

*ஆர். புனிதம்*
*பத்தாம் வகுப்பு*
*மதிப்பெண் : 416*



1999–2000ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்வில் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க சந்தினாம்பட்டு கிளை இரவு பாடசாலையில் பயின்ற மாணவிகள் பள்ளியிலேயே முதல் மாணவிகளாக தேர்ச்சி பெற்றுள்ளனர். அதற்காக நாம் பெருமைப்படுகின்றோம்.

நூல் – அஞ்சல்

பெறுநர்

Published by G. GOPINATHAN, 67, Canal Street, Chennai - 600 0[illegible] Printed by [illegible] NAVANEETHAN at NAVAJOTHI ACHAGAM, Chennai - 600 002.

படிப்பகம்